ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2122/27 - 2019 මැයි මස 08 වැනි බදාදා - 2019.05.08
*2122/27 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மே மாதம் 08 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: DST/ LND/ 1/ACQ/5.
காணி அமைச்சின் குறிப்பு இல.: LD/5/2008/HW.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

கொழும்பு - காலி - ஹம்பாந்தோட்டை - வெல்லவாய வீதியில் 210/3 ஆம் இலக்க பாலத்துக்கு காணி எடுக்கப்படுகின்றது.

தென் மாகாணம், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில், தங்காலை பிரதேச செயலாளர் பிரிவில், நெகெனஹிர கிருவ பத்துவை சிறு பிரிவில், ரன்னா மேற்கு கிராம சேவகர் பிரிவில் உள்ள, ரன்னா கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை அதிபதியினால் தயாரிக்கப்பட்ட 30.09.2016 ஆந் திகதிய இறுதிக் கிராம வரைபட இல. 328 இல் துண்டு இல. 732 மற்றும் 733 இல் விபரிக்கப்பட்டுள்ள சுமார் 0.0058 ஹெக்டயார் மொத்த விஸ்தீரணமுடைய ''கெட்டங்கஹகொறட்டுவ, பள்ளமேத்மகா, பள்ளம மற்றும் அம்பகஹவெல'' என அழைக்கப்படும் இரண்டு (02) காணித் துண்டுகள் :

*01.* **துண்டு இல. 732**
**காணியின் பெயர்: கெட்டங்கஹகொறட்டுவ, பள்ளமேத்மகா மற்றும் பள்ளம; விஸ்தீரணம்: 0.0052 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு இல. 79 ; கிழக்கு: துண்டு இல. 79; தெற்கு : துண்டு இல. 79 ; மேற்கு: துண்டு இல. 79, 81ஏ மற்றும் 733.

*02.* **துண்டு இல. 733**
**காணியின் பெயர்: அம்பகஹவெல; விஸ்தீரணம்: 0.0006 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு இல. 81ஏ ; கிழக்கு: துண்டு இல. 79 மற்றும் 732; தெற்கு : துண்டு இல. 81ஏ ; மேற்கு: துண்டு இல. 81ஏ.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆந் திகதி மு. ப 10.00 மணிக்கு பாத்ததும்பரை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 03 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பிரதேச செயலாளர்,
தங்காலை.

பிரதேச செயலகம்,
தங்காலை.

05 - 555